# இலங்கை நூலகச்சங்கம் செய்திமடல்

தொகுதி - 37 இல. 01 ஆடி – புரட்டாதி 2020 ISSN 1391 -2531

## தலைவரின் செய்தி






இலங்கை நூலக சங்கத்தின் புதிய காலப்பகுதிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. கடந்த சில மாதங்களில் ஏற்பட்ட ‘கோவிட்-19’ தொற்று நோய் நாம் வாழும் முறையை வெகுவாக மாற்றியுள்ளது. நூலகங்களை பௌதீக ரிதியில் அணுகும் முறையானது அரிதான ஒரு நிகழ்வாக தடுக்கப்பட்டமை, நெருக்கடி சூழ்நிலைகளில் நூலக சேவைகளை சீராக வழங்குவது குறித்த புதிய படிப்பினைகளை எங்களுக்கு கற்பிக்கிறது. நிகழ்நிலையை (Online) கவனிக்காது புறக்கணித்தவர்களிற்கு கூட சேவைத்தளங்களின் நெறிமுறையாக நிகழ்நிலை தோன்றி உள்ளது.

உலகளாவிய ரீதியிலும் உள்நாட்டு ரீதியிலும் ஏற்பட்டுள்ள இடையூறுகளிற்கு மத்தியிலும் இலங்கை நூலகச் சங்கம் இந்நாட்டின் நூலகத் தொழிலை மிகச் சிறந்த இடத்திற்குக் கொண்டு செல்ல தயாராக உள்ளது. இம்மதிப்பிற்குரிய தொழிலின் உள் தொழில் முறை மற்றும் ஒருமைப்பாட்டின் நடைமுறைக்கு உத்தரவாதம் அளிக்க நாங்கள் கடுமையாக முயற்சிக்கும் போது, எங்கள் தொழில் வல்லுநர்கள் அவர்களின் தொழிற்பாதைகளில் உறுதியற்ற தன்மை அல்லாதவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு நாங்கள் திடசங்கற்பம் எடுத்துள்ளோம். வெவ்வேறு நூலக வகைகளில் புதிய நியமனங்கள் மற்றும் பதவி உயர்வு ஆகியவற்றில் முரண்பாடுகளை சரி செய்விதில் குறித்த சில சிக்கல்கள் உள்ளன. இது தொடர்பாக அரச, மாகாண, பாடசாலை நூலகத்துறைகளிற்கு சிறப்புக் கவனம் தேவைப்படுகிறது. வேலைவாய்ப்பை ஒழுங்குபடுத்துவதற்கும் சிறந்த சேவை நிலைமைகளைப் பாதுகாப்பதற்கும் இலங்கை நூலகச் சங்கமானது இவற்றுடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் அரச அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துகிறது.

நூலக விஞ்ஞான கல்வியின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டை மேம்படுத்துவதன் மூலமும் நூலகவியல் கல்வியை நெறிப்படுத்துவது இந்த புதிய தவணைக் காலப்பகுதிக்குரிய எமது முன்னுரிமையான செயற்பாடு ஆகும். நூலக தகவல் விஞ்ஞானக் கல்வியும் வேலை வாய்ப்பும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட வேண்டியவை. நூலக தகவல் விஞ்ஞானத்தைக் கற்பவர்கள் தங்களது தொழில் முன்னேற்றத்திற்கான தெளிவான பாதையைப் பாரக்க வேண்டும். இக் கல்வியானது எதிர்கால நூலகர்களிடையே திறமைகளையும், திறன்களை வளரப்பதிலும் ஒரு போதும் மட்டுப்படுத்தக் கூடாது. நூலக கோட்பாட்டாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொழில் முனைவோர் ஆகியோர் உருவாக வேண்டும். இலங்கை நூலக சங்கத்தினை முன்நோக்கி நகர்த்துவதற்கு தற்போதைய பிரச்சினைகள் மற்றும் மருத்துவ மதிப்பீடு, தீர்மானம் எடுத்தல் போன்றவை பற்றிய விமர்சன பகுப்பாய்வு அவசியம். இந்த முயற்சியில் எங்கள் சங்க உறுப்பினர்கள் அனைவரும் எங்களுடன் இருப்பதாக நாங்கள் நம்புகிறோம். இதுவரையில் உறுப்பினர்களாக சேராதவர்கள், அங்கத்துவத்தை புதுப்பிக்காதவர்கள் விரைவில் எங்களுடன் கை கோர்க்கலாம். தொழில் சார் பாதைகளில் அனைவரும் வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

கலாநிதி. ருவான் கமகே - தலைவர் - இலங்கை நூலக சங்கம்.

## உள்ளே


- தலைவரின் செய்தி 1
- உயர்டிப்புளோமா விருதுகள் விழா 2
- உயர்டிப்புளோமா புலமைப் பரிசுகளும் விருதுகளும் 2
- இலங்கை நூலக சங்கத்தின் 60வதுவருடாந்தபொதுக்கூட்டம் 2
- துணை அங்கத்துவ விருதுகள் 3
- இணை அங்கத்துவ விருதுகள் 3
- விஜிதா டீ சில்வா ஆய்வு விருது 3
- TVEC பணியாளர்கள் வருகை 4
- டிப்புளோமா செய்திகள் 4
- மூதவை உறுப்பினர்கள் 2020/2021 4
- அறிவித்தல்கள் 4


The SLLA Newsletter is published quarterly by the Sri Lanka Library Association.
An e-copy of this Newsletter is available at http://www.slla.org.lk
*Sri Lanka Library Association, Organization of Professional Associations, Sri Lanka, 275/75, Stanly Wijesundara Mawatha, Colombo 07, Sri Lanka, Tel/Fax: +94-11-2589103, Email:slla@sltnet.lk*

## நூலகமும் தகவல் விஞ்ஞானமும் - உயர்டிப்புளோமா விருது வழங்கும் விழா 2020

நூலகமும் தகவல் விஞ்ஞானம் உயர்டிப்புளோமா – 2020 விருது வழங்கும் விழா கடந்த ஆவணி மாதம் 28ந் திகதி இலங்கை மன்ற கேட்கோர் கூடத்தில் நடைபெற்றது.



இவ்விழாவில் பிரதம விருந்தினராக பேராசிரியர் சுதந்த லியனகே (துணைவேந்தர்- ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்) கலந்து சிறப் பித்தார். இலங்கை நுலகச் சங்கத்தின் முன்னாள் தலைவர்கள், சபை உறுப்பினர்கள், பிராந்திய ஒருங்கிணைப்பாளர்கள், மற்றும் விரிவுரையாளர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



இந்நிகழ்வில் நூலகமும் தகவல் விஞ்ஞர்னமும் உயர்டிப்புளோமா கற்கை நெறியை நிறைவு செய்த 103 மாணவர்கள் கற்கை நெறிச் சான்றிதழ்கள் வழங்கிக் கொளரவிக்கப்பட்டனர்.



## நூலகமும் தகவல் விஞ்ஞானமும் - உயர்டிப்புளோமா

**எஸ்.சீ. புளொக் ஞாபகார்த்த புலமைப்பரிசில்**
**உயர் டிப்புளோமா மட்டம் 1 – 2019/2020**
**ஆர்.எம்.டீ. ரணதுங்க (சிங்கள மொழிமூலம்)**


**உயர் டிப்புளோமா மட்டம் 11 – 2018/2019**
**டபுள்யு. எம்.என் டீ பண்டார (சிங்கள மொழிமூலம்)**

**சிறந்த சாதனைக்கான தங்கப்பதக்கம்**
**உயர் டிப்புளோமா மட்டம் - 111 - 2018/2019**

**டபுள்யு. ஏ. திலினி விஜேசிங்க**

**சிறந்த ஆற்றுகைக்கான ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் ஞாபகார்த்த பரிசு 2018/2019**

**டபுள்யு. ஏ. திலினி விஜேசிங்க**







## இலங்கை நூலகச் சங்கத்தின் 60வது வருடாந்த பொதுக்கூட்டம்

இலங்கை நூலகச்சங்கத்தின் 60வது வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த 18.09.2020 அன்று கொழும்பு 7ல் உள்ள இலங்கை மன்றத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினர் உட்பட்ட சபை உறுப்பினரின் கண்கவர் ஊர்வலத்தின் பின்னர் பிரதம விருந்தினர் திருமதி கஜனி டீ அல்விஸ், கலாநிதி நயனா விஜயசுந்தர (தலைவர் - SLLA), கலாநிதி ருவான் கமகே (தேர்வு செய்யப்பட் தலைவர்), செல்வி லீலாமணி அமரசேகர (பொதுக் காரியதரிசி) மற்றும் சிறப்பு விருந்தினர்களின் மங்கள் விளக்கேற்றலுடன் வருடாந்த பொதுக் கூட்டம் ஆரம்பமாகியது. இலங்கை நூலகச்சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் நூலகத்துறை சார்ந்த தொழில் வல்லுனர்கள் இவ்விழாவில் பங்குபற்றினர். பிரதம விருந்தினர் திருமதி கஜனி டீ அல்விஸ் (Global Chairperson women in Logistics & Transport- WILAT) அவர்களின் சிறப்பான சொற்பொழிவும் இடம்பெற்றது.







வருடாந்த பொதுக் கூட்டத்தின் ஆரம்ப நிகழ்வின் பின்னர் 2020/2021 ஆம் ஆண்டிற்கான புதிய மூதவை உறுப்பினர்களும் தொழில்வாண்மைக்குழுக்களுக்கான பொறுப்பாளரகளும் தெரிவு செய்யப்பட்டனர். கலாநிதி ருவான் கமகே (பதில் பணிப்பாளர் - நூலக தகவல் விஞ்ஞான தேசிய நிறுவகம், கொழும்பு பல்கலைக்கழகம்) இலங்கை நூலகச்சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்







# துணை அங்கத்துவ விருதுகள் (FELLOWSHIP) 2020









18 செப்ரெம்பர் 2020, அன்று நடைபெற்ற இலங்கை நூலகச் சங்கத்தின் 60ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் இந்நாட்டின் நூலகத் துறைக்கு ஆற்றிய பங்களிப்பிற்காக துணை அங்கத்துவ விருதுகளை (Fellowship) பெற்றுக்கொண்டனர். திருமதி. பீ.சீ.டீ.எஸ். குணசேகர திரு. கலாநிதி. கே. ஆர். என்.ஹர்ஷனி, திருமதி கீதானி அத்தநாயக்க, பீ. என். ஜீ. எஸ். பிரேமரத்ன, கலாநிதி. திருமதி. மைதிலி விசாகரூபன, திரு. டபிள்யு. பிரேமதர்ஷன, மற்றும் திருமதி. கே.பீ.என்.டீ. பீரிஸ்.

## இணை அங்கத்துவ விருதுகள் (ASSOCIATESHIP) 2020

18 செப்ரெம்பர் 2020, அன்று நடைபெற்ற இலங்கை நூலகச் சங்கத்தின் 60ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் இணை அங்கத்துவ விருததுகளைப் (Associateship awards) பெற்றுக்கொண்டனர்

1. கே.தனுஷா ஸ்வர்ணா அத்துக்கொரள
2. ஏச்.ஜீ.பீ.எஸ்.சதுரிகா டில்ஹானி
3. கலாநிதி பீ.எம.எம.சீ.பீ.ஹின்டாகொல்ல
4. கஹடுவ ஆராச்சிகே விசாகா நர்மதா
5. ஏ.பீ.சீ.சந்ரகாந்தி பெரேரா
6 டபிள்யு. பீ. கஜனி லசந்த பெரேரா
7 பிரன்கிகே மெரன்கிகா அயோமி
8. பிரேமதாசன் பிரசாந்தன்
9. செல்வநாயகம் சாந்தரூபன
10. ஹேரத் முடியென்செலகேதிலகரத்ன
11. பிரதீபா எரந்தி சதுரானி விஜயமுனிகே
12. பீ ஜீ சுலேகா பத்மினி விமலசிறி














## விஜிதா டீ சில்வா ஆய்வு விருது -2020



2020ஆம் ஆண்டுக்கான விஜிதா டீ சில்வா ஆய்வு விருது இரு குழுக்களுக்கு வழங்கப்பட்டது. அவையாவன. " 1962 முதல் 2018 வரையான காலப்பகுதியில் வெளியிடப்பட்ட நூலகமும் தகவல் விஞ்ஞானமும் தொடர்பான கட்டுரைகளுக்கான சுட்டி" எனும் தலைப்புக்காக வணக்கத்திற்குரிய லெகும்டெனிவே பியரத்ன தேரோ, கலாநிதி ருவான் கமகே, யூ.பீ. அழகக்கோன், பேராசிரியர். வீரசூரிய, மற்றும் சுகத் குணதிலக, ஆகியோரை உறுப்பினர்களாகக்கொண்ட கலாநிதி ஆனந்த திஸ்ஸ தலைமையிலான குழுவினர். அடுத்து "இலங்கையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர நூலகங்களுக்கான கட்டட, உட்புற வடிவமைப்பு மற்றும் தளபாடங்களுக்கான கட்டடக்கலை வடிவமைப்புக்கள்" எனும் தலைப்புக்காக குசுமாஞ்சலி, சாந்தனி செனரத், காஞ்சனா டீ சில்வா, சாமரி யாப்பா, யமுனா ஸீகநாகமகே மற்றும் அமரா பத்திரன ஆகியோரை உறுப்பினரர்களாகக் கொண்ட திருமதி சந்திமா திஸநாயக்க தலைமையிலான குழுவினர்..



## TVEC பணியாளர்கள் வருகை

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழுவை;(TVEC) சேர்ந்த இரு பணியாளர்கள் இலங்கை நூலகச் சங்கத்திற்கு கடந்த 22.09.2020 அன்று வருகை தந்திருந்தனர். இலங்கை நூலகச் சங்கத்தின் டிப்புளோமா மற்றும் உயர் டிப்புளோமா கற்கை நெறிகளுக்கான தேசிய தொழிற் கல்வித் தராதரம் (NVQ) பற்றிக் கலந்துரையாடியதுடன் இக்கற்கை நெறிகளுக்கான தேசிய தொழிற் கல்வித் தராதரம் (NVQ) பெறுவதற்கு முன்னர் தயாரிக்கப்படவேண்டிய சில வழிகாட்டல்களையும் வழங்கினர். இது தொடர்பான ஆவணங்களையும் கற்கைநெறி மற்றும் விரிவுரைகள் தொடர்பான வழிகாட்டல்களையும் தயாரிப்பதற்கான கல்விசார் குழுவின் உப குழுவொன்று நியமிக்கப்பட்டது.



## இலங்கை நூலக சங்க பேரவை உறுப்பினர்கள் 2020/2021

**தலைவர்:** கலாநிதி. ருவான் கமகே
**உடனடி கடந்த கால தலைவர்:**கலாநிதி.(திருமதி).என்.டீ.விஜயசுந்தர
**தேர்வு செய்யப்பட்ட தலைவர்:** கலாநிதி. ஆர்.டீ.ஆனந்த திஸ்ஸ
**உப தலைவர் :** திரு. அன்ரன் நல்லதம்பி
**காரியதரிசி:** கலாநிதி. திருமதி. கே.ஆர்.ஏ.என்.ஹர்ஷினி
**உதவிக் காரியதரிசி:** : திருமதி. பிரியதர்ஷினி ஹேமகுமார
**பொருளாளர்:** திருமதி. வருணி கல்லபடாராட்சி
**கல்வி அலுவலர்:** கலாநிதி. செல்வி. சம்பா அழஹக்கோன்
**உதவி கல்வி அலுவலர் :** திருமதி. பிரியானி பாலசூரிய
**வெளியீட்டு அலுவலர்:** திருமதி.ரீ.சிறீதரன்
**தகவல் மற்றும் பொது தொடர்பாடல் அலுவலர்:** கலாநிதி. எஸ்.கே. இலங்கரத்ன
**தொழில்வாண்மை சார் குழுக்கள்**
**கல்விசார் நூலகங்கள்:** திரு. நோமன் ரவிக்குமார்
**கொமெஸ்ப் :** திரு.எஸ். சுராந்தரூபன்
**அரச நூலகங்கள்:** திருமதி. யானிகா நந்தசேன
**தேசிய நூலகம்:** திரு. விஜய பிரேமதர்ஷன
**மாகாண நூலகங்கள்:** திருமதி. வஸந்தா குருப்பு
**பொது நூலகங்கள்:** திரு தம்மிக வீரக்கோன்
**விசேட நூலகங்கள்:** திருமதி. ரஞ்சனி ஹேரத்
**பாடசாலை நூலகங்கள்:** திருமதி. சந்திமா திஸநாயக்க
**பரிந்துரைக்கப்பட்ட சபை உறுப்பினர்கள்:**

1. திருமதி. சிவந்தி வீரசிங்க
2. திரு. லால் பன்னிலா

**பரிந்துரைக்கப்பட்ட நிருவாக்குழு உறுப்பினர்கள்:**

1. திருமதி. சுனேத்ரா பெரேரா
2. செல்வி. ருக்மலி சேபாலிகா

## டிப்புளோமா கற்கை நெறிச் செய்திகள்

### டிப்புளோமா கற்கைநெறி மட்டம் 1 2020/2021 ஆரம்ப நிகழ்வு - மட்டக்களப்பு

நூலகவியல் டிப்புளோமாக் கற்கை நெறியின் மட்டம் ஒன்றிற்கான ஆரம்ப நிகழ்வு மட்டக்களப்பு பொதுநூலகத்தில் 26.07.2020 அன்று நடைபெற்றது. மட்டக்களப்பு நிலைய ஒருங்கிணைப்பாளர் திரு. எம்.என். ரவிக்குமார், விரிவுரையாளர்கள் திரு.பீ.பிரசாந்தன், ஏ.சீ.ஏ.சதாத் மற்றும் பொது நூலகர் ரீ.சரவணபவன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். கற்கைநெறிக்குப் பதிவு செய்த சுமார் 40 மாணவர்கள் இந்த ஆரம்ப விழாவில் கலந்து கொண்டனர்.



## இலங்கை நூலக சங்க வெளியீட்டுக்குழு 2020/2021

**தயானந்தி. சிறீதரன் (வெளியீட்டு அலுவலர்)**
**கோமதி முருகதாஸ்**
**ஏம்.எஸ்எம் ஷிஹாம்**
**பவிதாரா விஜயவர்தன**
**சந்திமா வதசிங்க**
**பீ.என். ஜீ. எஸ் சுனில் பிரேமரத்ன**
**ஏ.வீ.எம்.கே. அன்கும்பர**

### செய்தி மடலுக்கான செய்தித் துணுக்குகள் தொகுதி. 37 இல. 02 (Oct. – Dec. 2020)

உங்களுடைய நூலகங்கள் தொடர்பான அனுபவங்கள், நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகளை தொடர்ந்து வெளியிடவுள்ள செய்திமடலில 37(2) பிரசுரிப்பதற்கு அனுப்பி வையுங்கள். இதன் நோக்கம் எமது உறுப்பினர்களிடையே அவற்றை பரப்புவதும் பரிமாறுவதுமாகும். உங்கள் செய்திகளை ஆளு றழசன கோப்பில் பதிவு செய்து பின்வரும் ஏதாவது ஒரு மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் sritharan@lib.cmb.ac.lk or sllapublicationofficer@gmail.com

## அறிவித்தல்

### கட்டுரைகளுக்கான விண்ணப்பம் – இலங்கை நூலக மீளாய்வு (Sri Lanka Library Review) தொகுதி. 35. இல. 1

இலங்கை நூலகச் சங்கத்தின் வெளியீட்டுக் குழுவினரால், இலங்கை நூலகச் சங்க உறுப்பினர்கள் மற்றும் புலமையாளர்களிடமிருந்து இலங்கை நூலக மீளாய்வு (Srilanka Library Review) தொகுதி 35. இல.1 றகான கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன. இலங்கை நூலக மீளாய்வு தூய மதிப்பாய்வுடன் வெளியிடப்படும். இப்பருவ இதழ் திறந்த அணுகல் முறையில் பெறக்கூடியது. தற்போது வருடம் இருமுறை வெளியிடப்படுகிறது. தொகுதி 35 ன் முதலாவது வெளியீடு 2021ஆம் ஆண்டு தைமாதத்தில் வெளியிடப்படும்.. இதற்கான கட்டுரைகள் கார்த்திகை 30ந்திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய எந்த மொழிகளிலும் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க முடியும். உங்கள் கட்டுரைகளை MS word கோப்பில் பதிவு செய்து வெளியீட்டு அலுவலருக்கு sritharan@lib.cmb.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது sllapublicationofficer@gmail.com எனும் முகவரிக்கோ அனுப்பி வைக்கவும் மேலதிக விபரங்களை இலங்கை நூலகச் சங்க இணைய தளத்தில் ( www.slla.org.lk) பார்வையிட முடியும்.

**If undelivered please return to:**

Sri Lanka Library Association,
OPA Center,
275/75, Stanly Wijesundara Mawatha,
Colombo 07.

**To:**